Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

அங்கீகாரப்படி
**தேசிய லொத்தர் (சுவீப்)**
பூரண உரிமையாளர்
கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.
தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.
கிளை
விஜி கூல் பார்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டருக்கு எதிரில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி ... 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 20 ஆம் நாள் முஹர்ரம் 20 (2-6-64) செவ்வாய்க்கிழமை இதழ் 114

# கட்டாய ஓய்வை எதிர்த்து வழக்கு

## பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்வர்

### 29வது ஷரத்து பாதுகாப்பு அளிக்குமென நம்பிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

சிங்களத்தில் தகுதி பெற முயற்சி செய்யாத அரசாங்க உத்தியோகத்தர் கட்டாயமாக ஓய்வு பெற நிர்ப்பந்திக்கப்படும் அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு முதலாவதாக திறைசேரி உயர்தர அதிகாரிகளுள் ஒருவரான திரு. திருநாவுக்கரசு தியாகராசா பலியானுர். இதைத் தடை செய்யத் தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் விடுத்த வேண்டுகோளுக்கு பிரதமரோ அவருடைய மந்திரிகளோ செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

இலங்கையின் அரசியல் திட்டத்தின் 29-வது ஷரத்தில், லஞ்ச விசாரணைச் சபையின் தீர்ப்பை அண்மையில் பிரிவிக் கவுன்சில் நிராகரித்த பின் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தருக்கு ஒரு புதிய நம்பிக்கை பிறந்திருக்கிறது. அரசியல் திட்டத்தின் 29-வது ஷரத்தின்படி சிறுபான்மைச் சமூகத்தினர் எவ்வகையிலும் பாதிக்கப்பட இடமில்லை. பாதிக்கப்பட்ட சிறுபான்மையினருக்கு அது பாதுகாப்பு அளிக்க வல்லதென்றதனுல் கட்டாய ஓய்வு பெற நிர்ப்பந்திக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து பரிகாரம் தேடுவதாகத் தீர்மானித்துள்ளனர். திரு. தியாகராசாவைத் தொடர்ந்து, இரண்டு பேராகுதல் கட்டாய ஓய்வு பெற்றதும் அவர்கள் மூவரும் சேர்ந்து வழக்குத் தாக்கல் செய்வதாகத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

ஆனுல் அரசியல் திட்டத்தின் 29-வது ஷரத்தின் சக்தி பிரிவிக்கவுன்சிலின் தீர்ப்பின் அளவிற்கு உள்ளதா என்பதை அட்டோர்னி ஜெனரல் ஆராய்கிருரென்றும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் அரசாங்கம் கட்டாய ஒய்வு அறிவித்தல்களை வாபஸ் பெறலாமெனவும ஊகிக்கப்படுகிறது.

## ஜூன் 5-ல் கலாசார விழா கொண்டாடமுடிவு

நல்லூர், செவ்வாய்

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட தினமான ஜூன் 5-ம் திகதியை இவ்வருடம் தமிழர் கலாசாரத் திருநாளாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வருகிற வெள்ளிக்கிழமை தமிழ்ப் பிரதேசங்களின் எல்லாப் பகுதிகளிலும் தமிழர் கலாசாரத் திருநாள் கொண்டாடப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஜூன் 5-ம் திகதியை ஆறு வருட காலமாகத்துக்க தினமாக அனுஷ்டித்து வந்த தமிழரசுக் கட்சியினர் கடந்த ஆண்டில் துக்க தினமாகக் கொண்டாடாமல் தமிழ் பேசும் மக்களின் கலை, கலாசாரப் பண்பாடுகளை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கான தினமாகக் கொண்டாடுவதென அறிவித்திருந்தனர்.

வருகிற வெள்ளிக் கிழமை தமிழ்ப் பிரதேசங்களில் கலை, கலாசார வளர்ச்சியை அறிவுறுத்தும் வகையில் விழாக்கள் கொண்டாடப்பட விருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை தமிழரசுக் கட்சிக்கிளைகள் கவனித்து வருகின்றன. இயல், இசை, நடனப்போட்டிகள் நடத்தவும் ஏற்பாடாகியுள்ளன.

சிங்கள கலைகள் வளர்ச்சிக்கு அரசாங்கம்பெரிதும் உதவுவது போல நமது கலை வளர்ச்சிக்கும் அரசாங்கம் உதவும் என்பதனை எதிர்பார்க்க முடியாதெனவும் நமது கலைவளர்ச்சியை வளர்க்கவேண்டியபொறுப்பு எம்மைச்சார்ந்திருப்பதனுலும் கலாசாரத் திருநாள் கொண்டாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக தமிழரசுக் கட்சிப்பிரமுகர் ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டு எட்டுஆண்டுகளாகிவிட்ட போதிலும் அரசாங்கம் முழுமையாக சிங்களத்தை அமுல் நடத்த முடியாமல் இருப்பதற்கு தமிழர்களின் எதிர்ப்பியக்கமே காரணமெனவும் அவர் மேலும் சொன்னுர்.

கருத்து வேறுபாடுள்ள தமிழ் இனமக்களை கலைவிழாக்களினுல் ஒன்றுபடுத்த முடியும் என்றநம்பிக்கையே இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்வதற்குரிய காரணமெனவும் அந்தப்பிரமுகர் கூறினுர்.

தமிழரசுக்கட்சியின் தலைமைப் பீடம் இதுபற்றி விரைவில் அறிக்கையொன்று வெளியிடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## மெரில் வந்து திரும்பினுர்!

யாழ்ப்பாணம், செவ்.

லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்தவரும் இடதுசாரி கூட்டரசாங்கத்தை எதிர்ப்பவருமான திரு. மெரில் பெர்னுண்டோ நேற்று முன்தினம் காலையாழ்ப்பாணத்துக்குவந்து மாலையில் திரும்பிச் சென்றுர்.

சமசமாஜ கட்சிக்கிளைக் காரியாலயத்தில் யாழ்ப்பாணம் சமசமாஜகட்சியினரை அவர் சந்தித்துப் பேசினுர்.

இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கும் சமசமாஜக்கட்சி மகாநாட்டில் டாக்டர் என். எம். பெரேராவின் கூட்டரசாங்கத் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு ஆதரவு திரட்டுமுகமாக அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பியதாகத் தெரிகிறது.

## பிரவேச விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப கல்லூரியில் புதிதாக சேரவிரும்புவோர் தங்கள் விண்ணப்ப பத்திரங்களை இம்மாதம் 13-ம் திகதி வரையும் அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற மாதம் 23-ம் திகதி விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதியென வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஒரு வார அவகாசமே கொடுக்கப்பட்டதால் இது குறித்து மாணவர்கள் மத்தியில் அதிருப்தி நிலவியதாக "ஈழநாடு" முன்னர் செய்தி வெளியிட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இரண்டாம் மூன்ரும் வருட வகுப்புகள் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது போலவே இன்று ஆரம்பமாகின்றன.

## அனுதாபத் தந்தி

வேலணை, திங்கள்

வேலணைக் கிராம சேமநல சபையினர் வேலணை மக்கள் சார்பில் மறைந்த பிரதமர் நேருஜிக்கு அனுதாபம் தெரிவிக்கும் தந்தியொன்றை அவர் புதல்வி இந்திராகாந்திக்கு அனுப்பிவைததனர்.

குருநகர்

## சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய மாணவர் வேலை நிறுத்தம்

### புதிய அதிபர் நியமனத்துக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்ட குருநகர் சென். ஜேம்ஸ் பாடசாலையின் புதிய அதிபர் நியமனத்தை ஆட்சேபிக்குமுகமாக இம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 700 . மாணவர்கள் நேற்றுமுதல் பாடசாலைக்குப் போவதை நிறுத்திக் கொண்டுள்ளனர்.

குருநகர் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் தற்காலிக அதிபராக இருந்த திரு. எஸ் ஜூசைப்பிள்ளையை நிரந்தரமாக்கப்படவேண்டியவிடத்தில் திரு. பெனடிக்ட் ஆசிநாதன் நேற்றுத் தொடக்கம் அதிபராக கல்விப்பகுதியால் நியமனம் செய்யப்பட்டதை எதிர்த்தே மாணவர்களைப் பாடசாலைக்குப் போகவிடாது பெற்ருேர் தடுத்து நிறுத்தியதாக அறியப்படுகிறது.

தலைமைவாய்ந்த திரு. ஜூசைப்பிள்ளை குருநகரைச் சேர்ந்தவரென்றும் அப் பகுதிப் பிள்ளைகளை முன்னேற்றப் பாதையில் செலுத்தும் அக்கறை அவருக்கு இருந்தது என்றும் அவரிடம் இயற்கையாகவே உற்சாகமாக மாணவர்களைக் கண்காணிக்கும் தன்மை இருந்துவந்ததென்றும் தமது பிள்ளைகளின் வளர்ச்சுக்கு இடையூருக நிற்க வேண்டாமென்றும் திரு ஜூசைப்பிள்ளையின் நியமனத்தையே இறுதிப்படுத்தும்படியும் பெற்ருேர் தந்திமூலம் கல்விமந்திரியையும், வித்தியாதிபதியையும் கேட்டுள்ளனர். மேலும் இந் நியமனத்தை உறுதிப்படுத்தும் வரை தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பப்போவதில்லை யெனவும் அத் தந்திகளில் குருநகர் பெற்ருேர் அறிவித்துள்ளனர்.

குருநகர் வட்டாரத்தின் மாநகரசபை அங்கத்தவர் திரு. பேரின்பநாயகமும் தனிப்பட்ட முறையில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபராக திரு. ஜூசைப்பிள்ளையின் நியமனத்தை உறுதிப்படுத்துமாறு கல்விமந்திரியையும் வித்தியாதிபதியையும் தந்திமூலம் கேட்டுள்ளார்.

பெற்ருரின் தூதுகோஷ்டியொன்று இன்று வடபகுதி உதவி வித்தியாதிபதியைச் சந்தித்து தமது கட்சியின் நியாயத்தை எடுத்துரைப்பதென பெற்ருர் நேற்றுத் தீர்மானித்துள்ளனர்.

## சுகாதார சேவையாளர் வேலைநிறுத்தம் செய்வர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இதுவரை தமது நீண்டகாலக் கோரிக்கைகளில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததபடியால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சுகாதாரசேவையாளர் மேலும் 2 வாரகாலம் அவகாசம்கொடுத்து அதற்குள் அக் கோரிக்கைகளுக்கு ஓர் தீர்வு காணப்படாவிட்டால் வருகிற பதினைந்தாம் திகதி வேலைநிறுத்தம் செய்வதாக ஆஸ்பத்திரி அதிபருக்கு அகில இலங்கைச் சுகாதார இலாகா தொழிலாளர் சங்கத்தின் யாழ்ப்பாண ஸ்தானக் கிளை அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

இவ் வேலைநிறுத்தத்திற்கான தீர்மானம் அகில இலங்கைச் சுகாதார இலாகா தொழிலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டத்திற்கு திரு. எம். வி. சிவசுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

அவர்களின் கோரிக்கைகள் வருமாறு:

1. பென்சன் கொடுபடுவதற்கெனத் தீர்மானிக்கப்பட்ட பெண் தொழிலாளர்களுக்குரிய சகாய நிதிப்பணம் பல வருடங்களாகியும் திருப்பிக் கொடுபடவில்லை; அது உடனடியாகக் கொடுபடவேண்டும்.

2. பணியாளர்கள், காவலாளிகள், கூலியாட்கள் ஆகியோருக்குரிய உத்தியோக உடை கொடுபடாது தாமதப்படுத்தப்பட்டுள்ளது. அவை தாமதமின்றிக் கொடுபடல் வேண்டும்.

3. வருடாவருடம் வார்டுகளில் செய்யப்படும் தொழி

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

"ஏழ்மை நமது மிகப் பெரிய விரோதி. அதை எதிர்த்து வெற்றிகொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமமும் இதைப்புரிந்து கொண்டு எல்லோரும் மன ஒற்றுமையுடன் வாழ வேண்டும்; அன்புடன் வாழ வேண்டும்.

— ஜவஹர்லால்நேரு

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி 20 (2-6-64)

## ஐரோப்பிய பொதுச்சந்தை

லண்டன், ஜூன் 1

ஐரோப்பிய பொதுச்சந்தையில் மடகாஸ்கார் உட்பட 18 ஆபிரிக்க நாடுகளை சேர்த்துக் கொள்வதென முடிவு செய்யப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஒரு வருடத்துக்கு ஒரு முறை இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப் படும்.

## திரு. ஜி. ஜி. யின் அறிக்கை

"மொழிப் பிரச்னைக்கு சமுகமான தீர்வு காணும் பொருட்டு வட்டமேசை மகாநாடு கூட்டும் உத்தேசமிருப்பதால், மகாநாடு கூட்டி ஒரு தீர்வு காணும் வரையிலாவது தமிழ் அரசாங்க ஊழியர்சம்பந்தமாக சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி வைப்பது விவேகமான தாயிராதா?" என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் தமிழ் அரசாங்க ஊழியரைகட்டாயமாக ஓய்வுபெறச் செய்யும் உத்தரவு சம்பந்தமாக விடுத்த ஓர் அறிக்கையில் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

இதையேதான் நாமும் பல தடவைகளில் வற்புறுத்தி வந்திருக்கிறோம். கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் முடிவு தெரியும் வரையாவது கட்டாயஓய்வு உத்தரவுகளை நிறுத்தி வைக்குமாறு பலரும் அரசாங்கத்தைக் கேட்டிருந்தனர். கோடீஸ்வரன் வழக்கு அப்பீல் முடிவு தெரியும்வரை உத்தியோகமொழி அமுல் சம்பந்தமாக மேற்கொண்டு எதுவித ஆலோசனையும் கூறும் நிலையில் தாம்இல்லையென்று அட்டர்ணி ஜெனரல் தெரிவித்த பின்னரும்கூட கட்டாயஓய்வு உத்ரவு நடவடிக்கையை அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவில்லை. உத்தியோக மொழிச்சட்ட அமுலை எதிர்த்து தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கவிருந்த நேரடி நடவடிக்கையை மொழிப் பேச்சுவார்த்தைக்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக அது ஒத்திவைத்திருந்தும் அரசாங்கம் மொழிச்சட்ட அமுலில் தீவிரம் காட்டத் தவறவில்லை. கட்டாயஓய்வு உத்தரவுகளை வாபஸ் பெறுமாறு திரு. செல்வநாயகம் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு பிரதமர் இன்னும் பதில் அளிக்கவில்லை என்பதை நாம் நேற்றும் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்நிலையில் திரு. பொன்னம்பலத்தின் அறிக்கைக்கு அரசாங்கம் எந்தஅளவுக்கு மதிப்புக் கொடுக்கும் என்பதை நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை. தமிழ் பேசும் மக்கள் இலங்கையிலிருக்கிறார்களென்றோ, அவர்களுக்கும் உரிமை வழங்க வேண்டுமென்றோ அரசாங்கம் சிறிதும் சிந்திப்பதாகவே தெரியவில்லை.

ஆனால் திரு. பொன்னம்பலத்தின் அறிக்கையிலுள்ள சில முக்கியமான அம்சங்கள் தமிழ்பேசும் மக்களினதும் இலங்கையிலுள்ள இதர அரசியல் கட்சிகளினதும் ஆழ்ந்த கவனத்துக்குரியன.

இலங்கை அரசியல் திட்டத்தில் 29-வது ஷரத்துபற்றி திரு. பொன்னம்பலம் தமது அறிக்கையில் குறிப்பிடுகின்றார். சமீபத்தில் லஞ்சஊழல் வழக்கு ஒன்றில் தீர்ப்பு வழங்கிய பிரிவிகவுன்ஸில் இந்த 29-வது ஷரத்தை எந்தவிதத்திலும் மாற்ற முடியாதென்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தது. இலங்கை அரசியல் திட்டத்திலுள்ள 29-வதுஷரத்தின் 2-வது பிரிவு சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கிறது. 1956-ம் வருடம் ஜூன் மாதம் 5-ம் திகதி 'சிங்களம் மட்டும்' மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டாம் முறையாக நிறைவேற்றப் படுவதற்கு முன், இந்த மசோதா அரசியல் அமைப்புத் திட்டத்தின் 29-வது ஷரத்தை மீறுவதாகுமென்றும் அதனால் இம்மசோதாவைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படாதென்றும் பிரச்னையை தான் கிளப்பியதாகவும் ஆனால் இது நீதிமன்றத்தில் விவாதிக்க வேண்டிய விஷயமெனக் கூறி சபாநாயகர் அதை நிராகரித்துவிட்டதாகவும் திரு. ஜி. ஜி. தெரிவிக்கிறார்.

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. வி. வீரசிங்கம் 29-வது ஷரத்து சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கிறதென்றும் சிங்களம் மட்டும் சட்டத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லலாமென்றும் அடிக்கடி தெரிவித்துவந்தார். ஆனால் அதைப் பற்றி அப்பொழுது எவரும் அக்கறை காட்டவில்லை. தமிழ் பேசும் மக்களுக்குள் சிறந்த சட்ட நிபுணர்கள் இருக்கின்றனர். இருந்தும் இவ்விஷயத்தில் அக்கறைகொள்ளாதது ஏன் என்பதும் இனியாவது 29-வது ஷரத்தின் துணையுடன் நீதிமன்றம் சென்று உரிமைக்காக வாதாட முடியுமாவென்பதும் தமிழ்பேசும் மக்கள் ஆராயவேண்டிய விஷயம்.

நாட்டின் ஐக்கியத்தையும், முன்னேற்றத்தையும கருத்தில் கொண்டு அரசாங்கத்தை அதன் பாரபட்சமான கொள்கைகளைக் கைவிட்டு மனமாற்றம் ஏற்படுத்துமாறு சிங்கள அரசியல் கட்சிகளையும், சிங்கள மக்களையும் திரு. பொன்னம்பலம் தமது அறிக்கையில் கேட்டுள்ளார். அறிக்கையுடன் நில்லாது சிங்கள அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி இவ் விஷயத்தில் தொடர்ந்து முயற்சி செய்தால் அது வீண் போகமுடியாது. தமிழ்பேசும் மக்களின் இன்றைய நிலையில் எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்யாவிடினும் தனித்தனியாகவாவது முயற்சி செய்யவேண்டியது அவசியம். "யார் குற்றியும் அரிசியாக வேண்டியதுதான்". உரிமை கிடைத்தால் போதும் என்பதே தமிழ்பேசும் மக்களின் நிலை.

## ஜவஹர்லால் நேரு

—வித்துவான், பொன். அ. கனகசபை—

பண்புட விருந்து வாழும்
பஞ்சசீ லத்தைக் கான்று
மண்' ல விருளைப் போக்கி
மாந்தர்வாழ் நாளைக் காணத்
தண்டளி ரியம வெற்பில்
ஜவகலால் நேரு வென்னும்
விண்டலப் பரிதி கீழ் பால்
விளங்கிட வுதித்த தம்மா.

உயர்நிதி யைந்த ருக்கள்
ஓங்கிய பொருப்பிற் றோன்றி
மயர்வறு கொள்கை மன்றல்
மனுக்குல முய்யத் தாங்கி
சயமுற வுலகிற் சூழ்ந்து
ஜவகலால் நேருத் தென்றல்
உயிரள பெடைபோ லின்பம்
ஓங்கிட வீசிற் றம்பா.

நேருவாம் புட்கலா வர்த்தம்
நிகரிலா நீதி யாண்மை
தேருமாக் கடல்மு கந்து
தெளிதரு நீர்மை தாங்கி
மேருமால் வரைமீ தேறி
வெள்ளியங் குவட்டி லார்த்துப்
போரிலா வுலகு பூப்பப்
பொன்மழை பொழிந்த தம்மா.

★

## யாரிடம் சொல்வோம்

—சக்தீ. அ. பாலையா—

யாரிடம் இனிமேல் கொடுமைகள் நீங்க
வழிமுறை கேட்கப் போம்!
யாரிடம் எங்கள் கவலைகள் சொல்வோம்
மனத் தாறுதல் பெறுவோம்
பாரினில் மாந்தர் படுதுயர் அறிந்த
பண்டித ஜவஹரைப் போல்
நேர்வழி கொள்ளும் மேதையாருண்டு
நினைக்கவு மரிதன்றோ!

வையத் துன்பம் அகற்றிய வேந்தன்
வன்பகை நீக்கியவன்
ஐயகோ! இனி நாம் யாரையே நம்பி
அமைதியை காணப் போம்
தெய்வத் தாகா செயலை இங்கு
செய்தவன் சென்று விட்டான்
உய்வதோ! ஒழிவதோ என நம்பி
உள்ளம் கரைகின்றோம்.

நடுநிலை சீலம் நவின்ற நம் நேரு
நானிலத் திரு ஒளியாம்
விடுதலைச் சுடரைத் தூண்டினன் சாந்தி
விளங்கிட நிலை செய்தான்
மிடியவை யகற்றப் பிறந்தவன் பெரிய
மேருபோல் எமைக் காத்தான்
அடிமைத் தளையை அகற்றிய எம்மான்
ஆசிய அருட் சோதி.

நவயுகச் சிற்பி ஜவஹர்லால் நேரு
நல்கிய பஞ் சீலத்
தவமதைக் காண்போர் ஒரு பெரும் புதிய
தாரணி காண்ப துண்மை
இவையறிந் தென்றும் பண்டித நேரு
இலட்சியம் வெல்க வென
கவலையும் நீங்கிக் காசினி வாழக்
கருது வோம் நடுநிலையே

## கிராம சபைத் தேர்தல்

நல்லூர், திங்கள்

தெல்லிப்பளை கிராம சபைத் தேர்தல் வருகிற சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது. 19 வட்டாரங்களையுடைய இக் கிராம சபைக்கு 7 வட்டாரங்களுக்கு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏனைய 12 வட்டாரங்களிலும் இடதுசாரி ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் போட்டியிடுவதனால் எல்லா வட்டாரங்களிலும் பலத்த போட்டி ஏற்பட்டுள்ளது.

மயிலிட்டி கிராமசபைத்தேர்தல் இம்மாதம் 13-ம் திகதி நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணார்பண்ணை கலட்டி மாரியம்மன்கோவில் மகாகும்பாபிஷேகம் சென்ற வியாழக்கிழமை சிறப்பாக நடந்தேறியது. இரவு மு. தா. பொன்னம்பலம் "மீனாட்சி அம்மன் திருமணம்" என்ற பொருள் பற்றிக் கதாப்பிரசங்கம் செய்தார்.

## நாட்டிலும் நகரிலும்

வெசாக் நாட்களில் கொழும்பிலும் பிறஇடங்களிலும் அமைக்கப்படும் பிரமாண்டமான சிகரப்பந்தல்களில் புத்தபகவான் இலங்கைக்கு விஜயம் செய்த வரலாறுகள் சித்திரிக்கபபட்டிருப்பதைக் காணலாம். அவர் இலங்கைக்கு மும்முறை விஜயம் செய்தார் என்பது பலரும் அறிந்த விஷயம். ஆனால் அவர் எவ்வெவ்விடங்களில் தங்கியிருந்து தியானத்தில் ஆழ்ந்து, தமது அன்பு நெறியைப போதித்தார் என்று சிலரே அறிவார்கள். பின்வரும் பதினாறு இடங்கள் அவருடைய வருகையால் புனிதமடைந்தன என்று கூறப்படுகிறது. மஹியாங்கனை (ஊவா மாகாணம்), களனி (கொழும்புக்கருகில்), நாகதீபம் (நயினாதீவு), கிரிவிகாரை (கதிர்காமம்), ஸ்ரீபாதம் (சிவனொளி பாதம்), திவகுஹ (ஸ்ரீபாதத்துக்கருகில்), திகவாபி (மட்டக்களப்பு மாவட்டம்), முதியாங்கனை (பதுளை), திஸமஹா விஹாரை (அம்பாந்தோட்டை மாவட்டம்), மகாபோதி, மிரிஸ்வெதி, தூபராம, அபயகிரி, ருவான்வலி, ஜெதவன, செலாசெதி. பின் சொல்லப்பட்ட ஏழு இடங்களும் அநுராதபுரத்தைச் சுற்றியுள்ளன.

மும்முறை இலங்கைக்கு விஜயம் செய்த புத்தபகவான் ககன மார்க்கமாகவே வந்தார் என்று பௌத்த நூல்கள் கூறுகின்றன. அவர் சமாதியடைந்த அரசமரத்தின் கிளையொன்றை எடுத்துக்கொண்டு இலங்கையில் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்காக அசோக சக்கரவர்த்தியால் இங்கு அனுப்பப்பட்ட அவரது புத்திரி, சங்கமித்தை, கடல்மார்க்கமாகத் தான் இலங்கைக்கு வந்தாள். அவள் எங்கு கரை சேர்ந்தாள் என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

பூகோள அமைப்பை இலகுவில் மாற்றமுடியாது. இந்தியாவுக்கு மிக அண்மையிலுள்ளது இலங்கையின் வடபகுதி. இன்று போல் அன்றும் இந்தியாவிலிருந்து கப்பலில் வருபவர்கள் கரையிறங்குவது வடபகுதியில்தான். விஜயன் கூட மாதோட்டத்தில்தான் வந்திறங்கினான். சங்கமித்தையும் மாதோட்டத்தில்தான் கரையிறங்கினளோ அல்லது யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள தீவொன்றில் வந்திறங்கினளோ?

மணிமேகலையில் கூறப்படும் மணிபல்லவம் நயினாதீவே என்று பொதுவாக நம்பப்பட்டாலும், இதுவும் சர்ச்சைக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய விஷயம்.

புத்தபகவானுக்கும், சங்கமித்தைக்கும், மணிமேகலைக்கும் அந்தக்காலத்தில் விசா, இமிகிரேசன், கள்ளத்தோணி, கள்ளக்கடத்தல், நாணயக் கட்டுப்பாடு என்ற தொந்தரவுகள் கல்லவேளையாக இருக்கவில்லை. எவரும் தாராளமாக வந்து போய்க்கொண்டிருந்தார்கள். இன்று நடப்பதென்ன?

∴ ∴ ∴

விளம்பரங்களைத் தெரிவிக்கும் 'போஸ்டர்'களை சுவரொட்டிகள் என்று மொழிபெயர்ப்பது இக் காலத்தில் தவறு. ஏனென்றால் அவை சுவர்களை சுவீகரித்தது போதாமல் கீழே இறங்கி தெருக்களையும் சுவீகரித்துக்கொண்டன. தெருவொட்டிகள் என்றும் கூறலாமல்லவா?

தார்போட்ட தெருக்களில் விளம்பரம்செய்யும் சூழ்ச்சியை எந்தப் புண்ணியவாளன் முதலில் கண்டுபிடித்தானோ தெரியவில்லை. அவனுக்கு ஒரு கும்பிடு! ஏன் இன்று தெருக்களெல்லாம் (பாரதியார் கனவுகண்டதுபோல்) தமிழ் முழக்கம் செய்கின்றன! கிராமச்சங்கங்களில் அங்கத்தவராக வர விரும்புபவர்களின் உருக்கமான வேண்டுதல்கள், சினிமாக்கார

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

ரின் அட்டகாச வீரப்பிரதாபங்கள், பீடிக் கொம்பனிகளின் விண்ணப்பங்கள் எல்லாம் தெருவழியே சிதறிக்கிடக்கின்றன

சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டினால் சட்டப்படி தண்டனையுண்டு பாவம், தெருக்களுக்கு அப்படிப்பட்ட அதிகாரம் கிடையாது.

போதாகுறைக்கு இ. போ. ச.வும் இந்தச் சலுவான முறையைக் கண்டுபிடித்துவிட்டது. 'பஸ் நிற்கும் இடம்' என்ற விளம்பரப்பலகைகளையும் அவற்றைத் தாங்கும் கம்பங்களையும் எமது எதிர்கால வீரப்பிரஜைகள் நௌித்து முறித்துவிடவே, இ. போ. ச. தரையில் விழுந்து 'தெருவே, நீதான் கதி' என்று பஸ் நிற்கும் இடங்களை தரைமட்டமாக்கிவிட்டது!

இதனால் ஊருக்கு புதிய பிரயாணிகள் மட்டுமல்ல, ஊருக்குப் புதிய சாரதிகளுக்குமே சிரமமாய்ப் போய்விட்டது. அவர்கள் ஊர்ந்து ஊர்ந்து சென்றுதான் பஸ் நிற்கும் இடங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்!

—வழிப்போக்கன்

# புதிய பிரதமர் தெரிவில் திரு. காமராஜ்

## தீவிர சமரச முயற்சி

### சாஸ்திரியையும் தேசாயையும் தனித்தனி சந்தித்துப் பேசினர்

புதுடில்லி, ஜூன் 1

இந்தியாவின் புதிய பிரதம மந்திரியைத் தெரிவுசெய்வதற்காக காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியின் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கூடவிருக்கிறது. காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்படுபவரே பிரதம மந்திரியாகப் பதவியேற்பார்.

பிரதம மந்திரியாக எல்லோருக்கும் ஏற்புடைய ஒரு அபேட்சகரைத் தெரிவுசெய்வதில் இப்பொழுது காங்கிரஸ் கட்சியின் அக்ராசனர் முயற்சி செய்துவருகிறார். காங்கிரஸ் காரியக் கமிட்டி அளித்த அதிகாரத்தின் கீழ் புதிய பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு அபேட்சகரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தவர்களையும், மந்திரிகளையும், பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் பலரையும் காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜ் சந்தித்து ஆலோசனை நடத்திவருகிறார். பிரதம மந்திரியை ஏகமனதாகத் தெரிவுசெய்வதற்கு அவர் தீவிரமாக முயற்சிசெய்து வருகிறார்.

இதற்கிடையில் காங்கிரஸைச் சேர்ந்த நூறு எம். பி.க்கள் திரு. காமராஜைச் சந்தித்துப் பேசினர். காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சித் தலைவர் தெரிவு சம்பந்தமாக அவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

பிரதம மந்திரி பதவிக்கு திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவுசெய்யப்படுவார் என்றும், தற்போதைய பிரதமர் திரு. ஜி. எல். நந்தா போட்டிக்கு நிற்கமாட்டாரென்றும் அறியப்படுகிறது. முன்னாள் நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் தேர்தலில் நிற்கமாட்டாரென்றும் பின்னர் அவர் தேர்தலில் நிற்பது உறுதியென்றும் செய்திகள் கூறுகின்றது.

திரு. காமராஜ் திரு. லால்பகதூர் சாஸ்திரியையும், திரு. மொரார்ஜி தேசாயையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

### லாவோஸ மகாநாடு

வியன்டைன், ஜூன் 1

லாவோஸ் நிலைமை பற்றி விவாதிப்பதற்காக 1962-ம் ஆண்டு ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளின் தூதர்கள் இன்று அல்லது காலை வியன்டைனில் கூடுவார்களென்று அறிவிக்கப்படுகிறது.

லாவோஸ் பிரதமர் சுவன்ன பூமாவின் கோரிக்கையின் மீது இக்கூட்டத்தை ஜெனிவா மகாநாட்டுத் துணைத் தலைவர்களில் ஒன்றான பிரிட்டன் அழைத்துள்ளது. இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு அமெரிக்கா, பிரிட்டன், கனடா, வியட்னாம் ஆகிய நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன. சீனாவும் கம்போடியாவும் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டன. இதர நாடுகளிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை.

## நேருவைப்போல் இருந்திருந்தால் பலபிரச்னைகளை தீர்த்திருக்கலாம்

### அனுதாபக்கூட்டத்தில் நீதியரசர் தம்பையா

கொழும்பு, திங்கள்

'ஜவகர்லால்நேருவின் மரணத்தினால் ஆசியாவில் சமாதானம் நிலைக்குமா என்ற சோதனை ஏற்பட்டுள்ளது' என கொழும்பு நகரமண்டபத்தில் நேருவின் மறைவு குறித்து நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில் திருமதி விவியன் குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை இந்திய நட்புறவுச் சங்கங்கள் பலவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்துக்கு சபாநாயகர் திரு. ஹியு. பெர்னாண்டோ தலைமை வகித்தார்.

"எமது சிறந்த நண்பர் ஒருவரை இழந்து நாம தவிக்கின்றோம். திரு. நேரு மறைந்துவிட்டதால இலங்கை இந்தியர் பிரச்னை பெரும் சிக்கல் நிறைந்ததாக இருக்கப் போகின்றது. இலங்கையின் பிரச்னைகள் பலவற்றை தீர்ப்பதில் திரு. நேரு நமக்கு வழிகாட்டியாக விளங்கினார். இலங்கையில் பௌத்த மதம் வளர்வதற்குக்கூட அவர் உதவி செய்தார்.

கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையில் ஒற்றுமையை வளர்க்க விரும்பினர். திரு. நேரு இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தது மட்டுமல்லாமல் பொருளாதார சுதந்திரத்தையும் உருவாக்கினர்" என்றும் திருமதி விவியன் குணவர்த்தன குறிப்பிட்டார்.

நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா பேசுகையில் திரு. நேரு பிரச்னைகளை தீர்க்க மனிதாபிமானத்துடன் அணுகுவார் என்றும் அந்த விதத்தில் நாமும் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சி செய்திருந்தால் பல பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

"உலகம் பூராவும், சிறப்பாக ஆசியாவிலும் சமாதானம் ஏற்பட போராடிய சிறந்த வீரர் நேரு. ஏகாதிபத்தியத்தை உதறிவிட்டு சுதந்திரத்துக்காக தொண்டாற்றும்படி தமது தந்தையையே தூண்டுவித்த பெருமை திரு. நேருவுக்குண்டு" என திரு. பிலிப் குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காக திரு. நேரு தமது காலத்தையும் பணத்தையும் செலவிட்டார் எனவும் 14 மாதங்கள் சிறையிலிருந்தமையே அவரின் வாழ்க்கையின் வீரத்துக்குப்பகுதி எனவும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியை தீவிரமாக எதிர்த்துப் போராடில திரு. நேரு இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் பிரிட்டிஷாருடன் நட்புறவு கொண்டாட விரும்பினர் என்றும் அதுவே அவரின் சிறந்த ராஜதந்திரத்துக்கு ஒரு எடுத்துக்காட்டெனவும் நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ தமது பேச்சின்போது குறிப்பிட்டார்.

வண. ஞானசீக தேரோ, சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை, திரு. நிசங்கா விஜயரத்ன ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.

## 'பல்லாண்டுகளுக்கு ஒருமுறையே நேரு போன்றவர் தோன்றுவர்'

--அயூப்கான்

### மறைந்த தலைவருக்கு உலகம் அஞ்சலி

#### அஸ்தியைத் தரிசிக்க பெருங்கூட்டம்

புதுடில்லி, ஜூன் 1

மறைந்த தலைவர் திரு. ஜவஹர்லால் நேருவின் அஸ்தி இப்பொழுது அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதைத்தரிசிப்பதற்காக பெருந்தொகையான மக்கள் தினசரி அங்கு சென்று வருகின்றனர். அஸ்தி இம்மாதம் 7-ந் திகதி பிற்பகலில் விசேஷ ரயிலில் அலகாபாத்துக்குக் கொண்டு செல்லப்படும். மறுநாள் 8-ந் திகதி அங்கு திரிவேணி சங்கமத்தில் அஸ்தி கரைக்கப்படும்.

அஸ்தியின் ஒரு பகுதி கொண்ட பேழை இன்று சண்டிகட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சண்டிகட்டின் மத்திய பூங்காவில் மக்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டபின் 8-ந் திகதி புண்ணிய தீர்த்தத்தில் கரைக்கப்படும் அஸ்தியை நாட்டின் பல இடங்களுக்கும் அனுப்பவும ஒழுங்கு செய்யப்பட்டுவருகிறது.

தலைவர் நேருவின் மறைவுக்கு அனுதாபந் தெரிவித்து இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல பொதுக்கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

நேற்று மாலை புதுடில்லியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மத்திய மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி பேசுகையில், பொது மக்களை ஸ்ரீ நேரு வெகுவாக நேசித்தார் என்று கூறினார். "நாட்டுக்கு விடுதலை தேடித்தந்தபின் ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாத்ததுடன் நாடு சிதைவுறாமலும் பாதுகாத்தார்". என்று திரு. சாஸ்திரி கூறினார். நாட்டின் ஐக்கியத்தையும், ஜனநாயகத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும் என்று கூறிய திரு. சாஸ்திரி 'விரைவில் நாம் பெரும் முடிவுகளைச் செய்ய வேண்டியிருக்கிறோம் அந்முடிவுகளை கண்ணியத்துடனும் நேர்மையுடனும், உண்மையுடனும் செயல்படுத்த வேண்டும்' என்று கூறினர்.

இக்கூட்டத்தில் முன்னாள் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் பேசுகையில், ஸ்ரீ நேருவின் மறைவு நமக்குப் பெருந்துயர் அளித்துள்ள போதிலும் நாம் நம்பிக்கையை இழந்து விடவில்லை யென்றார்.

இக்கூட்டத்தில் திருமதி அருணா ஆசப் அலியும் மற்றும் பலரும் பேசினர்.

கல்கத்தாவில் நகர மேயர் சித்தரஞ்சன் சட்டர்ஜி தலைமையில் நடந்த கூட்டத்தில் தலைவர் பேசுகையில், காலஞ்சென்ற பிரதமரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மக்கள் ஐக்கியமாக வாழவேண்டுமெனறு கூறினர்.

பம்பாயில் சர்வகட்சிக் கூட்டமொன்றும், சென்னையில் திராவிடர் கழகத்தின் ஆதரவில் ஒரு கூட்டமும் நடைபெற்றன. வடகிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள பொம்டிலா மற்றும் நகரங்களிலும் திரு. நேருவின் மறைவுக்கு அனுதாபந்தெரிவித்து அமைதியான ஊர்வலங்களும் கூட்டங்களும் நடைபெற்றன.

பாகிஸ்தானில் பெஷாவார் என்ற இடத்தில் நடந்த ஒரு வைபவத்தில் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் பேசுகையில், நேருவைப் போன்ற ஒரு தலைவர் பல்லாண்டுகளுக்கு ஒரு முறைதான் உலகில் தோன்றுவார் என்று குறிப்பிட்டார்.

### நேரு நினைவு தபால் முத்திரை

புதுடில்லி, ஜூன் 1

மறைந்த இந்தியப் பிரதமர் நேருவின் நினைவாக தபால் முத்திரையொன்று வெளியிடுவதெனவும் நேருவின் உருவப்படத்தைத் தாங்கிய இந்த முத்திரையைவிரைவில் வெளியிடுவதெனவும் இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

### துங்கு அமெரிக்கா செல்வார்

வாஷிங்டன், ஜூன் 1

மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அடுத்த மாதம் வாஷிங்டனுக்கு விஜயம் செய்வார். வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி திரு. லிண்டன் ஜோன்சனைச் சந்தித்து ஆசிய நிலைமை பற்றியும், உலக அரசியல் நிலை பற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவார்.

---

### இக்கேடா மாஸ்கோ செல்வார்

டோக்கியோ, ஜூன் 1

சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யுமாறு சோவியத் பிரதமர் விடுத்த அழைப்பை ஜப்பான் பிரதமர் திரு. இக்கேடா ஏற்றுக்கொண்டுள்ளார்.

---

### மாஸ்கோவில் வில்சன்

மாஸ்கோ, ஜூன் 1

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் திரு. ஹரோல்ட் வில்சன் நேற்று மாஸ்கோ வந்து சேர்ந்தார். சோவியத் பிரதமரையும் இதர தலைவர்களையும் அவர் சந்தித்து உலக விவகாரங்கள் பற்றியும் படைகுறைப்புப பற்றியும் பேசுவார்.

## தோல்வியில்முடிந்தவடகடாங்கா புரட்சியில் பலர் மாண்டனர்

எலிஸபெத்வில்லி, ஜூன் 1

வடக்கு கடாங்காவில் சென்ற வாரத்தில் மூன்று தினங்கள் நடந்து, தோல்வியில் முடிவடைந்த புரட்சியின் போது நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இப்புரட்சி முயற்சி சம்பந்தமாக இதுவரை 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். வடக்கு கடாங்கா அரசாங்க அதிபர் இறுங்கா காவலில் வைக்கப்பட்டுள்ளார். புரட்சி நசுக்கப்பட்ட சமயத்தில் வட கடாங்கா மந்திரியொருவர் கொல்லப்பட்டார். மற்றொரு அமைச்சர்பற்றி தகவல் இல்லை.

வட கடாங்காவில் புரட்சி முயற்சிபற்றிய தகவல் கிடைத்ததும் அங்கு விரைந்து சென்ற காங்கோ தளபதி, அங்குள்ள 14 படை அணிகளையும் முகாமுக்குள் இருக்கச் செய்து அவைகளுக்குப் பதிலாக லியப்போல்ட்வில்லியிலிருந்து புதிய துருப்புக்களை அழைத்து புரட்சியை அடக்கினரென அறிவிக்கப்படுகிறது.

---

### வங்கிகள் தேசிய மயம்

லண்டன், மே. 31

கம்போடியாவிலுள்ள தனியார்துறை வங்கிகள் அடுத்த மாத இறுதியில் தமது அலுவல்களை நிறுத்திக் கொள்ளும். கம்போடியாவிலுள்ள வங்கிகள் அரசாங்க உடமையாக்கப்படும் என்று கம்போடியா அரசாங்கம் கடந்த நவம்பர் மாதத்தில் அறிவித்திருந்தது.

மூன்று அரசாங்க நிறுவனங்கள் அடுத்த மாதம் இயங்கத் தொடங்கும்.

### யேமன் அதிபர் பீக்கிங் விஜயம்

மாஸ்கோ, ஜூன் 1

யேமன் அதிபர் அப்துல்லா சலால் பீக்கிங் செல்லும் வழியில் நேற்று மாஸ்கோவில் சில மணி நேரம் தங்கியிருந்தார். அப்பொழுது சோவியத் உதவிப் பிரதமர் மிக்கோயன் அவரைச் சந்தித்துப் பேசினர். சோவியத் அதிபர் பிரஸ்னேவை அதிபர் சலால் சந்தித்தார்.

சீன அதிபர் லி-ஷா-சியினதும் பிரதமர் சூ-என்-லாயினதும் அழைப்பின்மீது பீக்கிங் செல்லும் சலாலுக்கு பிரமாதமான வரவேற்பளிக்க பீக்கிங்கில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாம்.

---

சுன்னாகத்தில்

### பொன். கந்தையா பிறந்த தினவிழா

சுன்னாகம், திங்கள்

காலஞ்சென்ற முன்னாள் பருத்தித்துறை எம். பி. திரு. பொன். கந்தையாவின் பிறந்த தினவிழாவை அடுத்த மாதம் முற்பகுதியில் சுன்னாகத்தில் சிறப்பாகக் கொண்டாட இருப்பதாகாவும், தென் பகுதி இடதுசாரித் தலைவர்கள் பலரும் இவ்விழாவில் கலந்துகொள்ள இருப்பதாகவும் சுன்னாகம் கிளை கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் முன்னணித் தலைவர் திரு. சி. வஜயானந்தம் கூறினர்.



# மாணவர் மலர்



# நெஞ்சத்தில் நிலைத்துவிட்டார்

— மகான் —

**நேருஜியின் வாழ்க்கை முறைகள்; மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. அவரின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஒருமுறை புரட்டிப் பார்த்தால் மாணவ சமுதாயத்திற்கு உபயோகப்படும் பல நல்ல வழிகளைக் காணமுடியும். உலகமக்களிடமிருந்து விடைபெற்று நாட்கள் ஆகிய பொழுதிலும் நேருஜியின் கொள்கைகள்—இலட்சியங்கள்—வாழ்க்கை முறைகள் என்றும் நிலைத்திருக்கும். நம்மத்தியிலிருந்து அவர் பிரிந்த பொழுதிலும் எமது இதயத்தில் என்றும் இடம்பெற்றிருக்கும் தலைவரைப்பற்றி இச்சமயத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும்.**

இளம் வயதிலிருந்தே சுறுசுறுப்பும் வீரமும் கொண்ட நேரு தமது தாய்நாட்டின்மீது உயிரையே வைத்திருந்தார். விஞ்ஞானத்தின்மூலம் எதையும் முடிவு செய்ய வேண்டுமென்ற கொள்கை படைத்த நேருஜி, தமது பிற்காலத்தில் வாழ்க்கைப் பிரச்னைகளையும் விஞ்ஞான ரீதியில்தான் பார்க்க வேண்டுமென்று முடிவு செய்தார். "இப்படித்தான் இருக்கும்" என்பதைவிட்டு "ஏன் இப்படி இருக்க வேண்டும்" என்று சிந்திக்கத்தொடங்கினர். "மக்கள் இலைகளை புசிக்கிறார்கள், கனிகளை சாப்பிடுகிறார்கள். மலர்களை முகருகிறார்கள். ஆனால் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். இலைகளையும் கனிகளையும் மலர்களையும் கொடுப்பது மரம் தான்—அந்த வேர்தான் என்பதை மக்கள் உணர வேண்டும். எதிலும் அடிப்படைத் தன்மை—அடிப்படை மனப்பான்மை இருக்க வேண்டும்" என்று நேருஜி தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

நேருஜி விபத்துக்களைக் கண்டு பயப்படமாட்டார். விபத்துக்களை எதிர்ப்பதிலும் பின்னர் அவற்றை சிந்தித்து பார்த்து மகிழ்வதும் அவரின் சிறப்பான அம்சமாகும். எந்த நிகழ்ச்சியையும் அவர் சிந்தித்துப் பார்ப்பார். சிந்திப்பனே சிறந்த மனிதன் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு.

சுமார் முப்பது வயதிலிருந்தே அவருக்கு மலையேறுவதென்றால் ரொம்ப ஆசை. ஒரு தடவை அவர் மலையேறிக் கொண்டிருந்தார். அவருக்கு பின்புறமாக வந்தவர் நேருஜியை தள்ளிவிட்டார். ஆனால் நேருஜி அதை ஒருவாறு சமாளித்துவிட்டார். இல்லையென்றால் அவர் அன்று பாதாளப் படுகுழியிலே வீழ்ந்திருக்க வேண்டும். அப்பொழுதும் அவரிடம் பொறுமை குடிகொண்டிருந்தது.

நேருஜி பிரதமராக வந்த பின்னர் அவரின் நாளாந்தக் கடமைகள். மாணவ சமுதாயத்துக்கு—இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.



நேருஜி காலையில் 6-30க்கு நித்திரையிலிருந்து எழும்புவார். காலை 7-30க்குள் ஏராளமான தினசரிசெய்திப் பத்திரிகைகளையெல்லாம் படித்துவிடுவார். இதன் பின்னர் யோகாசனம். இதில் தினமும் அவர் சிரசாசனம் செய்யத் தவற மாட்டார். காலை உணவை 15 நிமிட நேரத்துக்குள்ளாக முடித்துவிடுவார். பொதுவாக சாப்பாட்டு விஷயத்தில் அதிக நேரமெடுப்பது நேருஜிக்கு பிடிக்காது. காலை 9-15க்கு வெளிநாட்டு காரியாலயத்துக்குள் நுழைவார். அங்குதான் எவ்வளவு பிரச்னைகள்! எவ்வளவு பேட்டிகள்!! எவ்வளவு வேலைகள்!!! மாலை 7-00 மணிக்கு நேருஜி வீடு திரும்புவார். இரவு 8-30க்கு வீட்டில் இருந்து கொண்டு காரியாலய வேலைகளைக் கவனிப்பார். பகலில் வந்த தந்திகளையும் மற்றும் முக்கிய கடிதங்களையும் நேருஜி இரவு வெகுநேரம் வரை படிப்பார். அவர் எப்பொழுது நித்திரைக்குச் செல்லுவார் தெரியுமா? இரவு 1-30க்குத்தான்! அப்படியென்றால் நேருஜி ஒரு நாளில் அதாவது 24 மணி நேரத்தில் 18 மணித்தியாலங்கள்வரை வேலை செய்கிறார். மிகுதி 6 மணிநேரத்திலும் இரவு 1-30லிருந்து அடுத்த நாட்காலை 6-30 வரை மட்டுமே நித்திரை செய்கிறார். மொத்தம் ஐந்து மணி நேரம் மட்டுமே அவர் நித்திரை செய்கிறார். இந்தக் கொள்கையில் நேருஜி மாற்றம் செய்வது கிடையாது,

உழைத்து உழைத்து தன் உடல், பொருள், ஆவி முழுவதையுமே உலகுக்கு அர்ப்பணித்த ஓர் ஒளி மறைந்துவிட்டது. மெழுகுவர்த்தி எப்படி தனது உடலையே உருக்கி ஒளியைப் பரப்புகிறதோ அப்படி நேருஜி மறைந்துவிட்டார். ஆனால் அவரின் கொள்கைகள் உலகில் என்றும் நிலைத்து நிற்கும். அவரின் அகில உலக சேவைக்கு நாம் ஆற்றும் கைமாறு... அவர் கண்ட இலட்சியக் கனவுகளை நனவாக்குவதே! அதற்கு வழி...? உலகில் சண்டையின்றி நிரந்தரசமாதானத்தை நிலைபெறச் செய்வதே. இதன் மூலம் நேருஜியின் ஆசியை மட்டுமின்றி அதிபர் கென்னடியின் ஆசியையும் எம்மால் பெற முடிகிறது! மறைந்த நேருஜி எமது நெஞ்சத்தில் என்றும் நிலைத்திருப்பார்.

# சிரஞ்சீவி நேருஜி

— நீ. இந்திரலிங்கம் —

கென்னடியின் மறைவை மற்றொருவர் வாயிலாகக் கேட்டபோது எங்ஙனம் நம்ப மறுத்தோமோ அதே போலவே ஸ்ரீ நேருஜியின் மறைவைக் கேட்டபோதும் நம்மால் நம்ப முடியவில்லை. அதுவும் இயற்கையின் விளைவால் மரணமுற்றார் என்று கேள்விப்பட்டபோது நம்மால் நம்பத்தானும் முடியவில்லை. எப்படித்தான் அந்தச் சமாதானத் தூதுவன், ஆசியாவின் அற்புத தீபம், காந்தீயத்தின் வாரிசு, நவபாரதத்தின் சிருஷ்டி கர்த்தாவுமாகிய அண்ணல் நேருஜியைக் கவர்ந்து செல்லக் காலனிற்கு மனம் வந்ததோ?

கோடீஸ்வரக் குடும்பத்திலேயே தோன்றிய ஸ்ரீ ஜவஹர்லால் நேரு தனக்குக் கிடைத்த இன்பங்களையெல்லாம் வெறுத்து ஒதுக்கி, நாட்டுப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவராவார். அப்படிப்பட்ட அரிய செயலைச் செய்த அவர் மகான்களின் வரிசையிலே வைக்கத் தகுந்தவர். காந்திஜியுடன் போராட்டத்திலே இறங்கி மக்களுக்காகப் பாடுபட்டு அதனாலேயே பலமுறை சிறை சென்றவர் — நேருஜி! தனக்குச் சிலைவைப்பதைவிரும்பாத அவர் ஒரு தற்பெருமையில்லாத கர்மவீரர்! அவர் தனது 'கோட்'டிலே எப்பொழுதும் ஒரு சிவப்பு ரோஜாமலரைச் சொருகி வைத்திருப்பது வழக்கம். அது கூடத் தனது நலன்கருதிப் பெருமையாக வைத்துக் கொண்டதல்ல!

ஒருமுறை நேருஜி ஒருபெண்ணைத் தனது வரவேற்பறையிலே சந்தித்தார். அப்பெண் மணி பல நாட்கள் அவரை நேரிலேபார்க்கஅவாக்கொண்டிருந்தார். அன்றுதான் அவளுக்கு அந்தப்பாக்கியம் கிட்டியது. நேருஜியைச் சந்தித்த அப்பெண் அவருடன் வெகுநேரம் அளவளாவி விட்டுக் கடைசியில் தனது அன்பளிப்பாக ஒரு சிவப்பு ரோஜா மலரை அவரிடம் கொடுத்து விட்டுச் சென்று விட்டாள். நேருஜிதான் தற்பெருமையற்றவராயிற்றே! யாரோ ஒருத்தி என்று அலட்சியம் செய்துவிடாமல் பெருந்தன்மையுடன் அதைத் தனது சட்டையில் செருகிக்கொண்டார். இதைப் பார்த்த வேலைக்காரன் சும்மாயிருப்பானா? "ஓஹோ! இவருக்கு சிவப்பு ரோஜா மலரில் விருப்பம் போலும்! அதுதான் தானாகவே தோட்டத்திலிருந்து பிடுங்கிச் செருகியிருக்கிறார்" என்று எண்ணினன் அவன். அடுத்தநாள் தொட்டு அவனே அந்த மலரை ஒவ்வொரு தினமும் பிடுங்கி வைக்க ஆரம்பித்துவிட்டான். கடைசியில் அந்த வழக்கம் அவருக்குப் பிடித்துவிட்டது. சமீபத்தில் ஷேக்-அப்துல்லா என்பவரும் நேருஜியைச் சந்திக்க வந்த பொழுது சிவப்பு

(5-ம் பக்கம் பார்க்க)

# மூளைக்கு வேலை

கடந்த வாரம் நான் கேட்ட கேள்வி, பலரின் மூளைக்கு நல்ல வேலையைக் கொடுத்திருக்கிறதென்பது நீங்கள் அனுப்பியுள்ள கடிதங்களிலிருந்து தெளிவாகப் புரிகின்றது. "உங்களின் கேள்விக்கு விடையைக் காண்பதில் என் கண்ணே பூத்துவிட்டது. வரிவரியாகப் படித்து என் கண்கள் வேதனையடைந்துவிட்டன" என்று சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதியுள்ளார். என்ன செய்வது. பிழைகளை நீங்களும் திருத்த வேண்டாமா?

சென்ற வாரம் நான் கேட்ட கேள்விக்குப் பலர் பலவிதமான விடைகளை அனுப்பியுள்ளனர். ஆனால் சரியான விடையை ஒருவரும், ஓரளவு சரியான விடையைச் சிலரும் அனுப்பியுள்ளனர். அவர்களின் பெயர்கள் வருகின்றன. ஓகோ... விடையைச் சொல்ல மறந்துவிட்டேனே என்று கோபிக்கிறீர்களா...? இதோ எமது சரியான விடை: ஏழு (7) பிழைகள்.

சரியான விடை அனுப்பியவர்: ம. நாகேந்திரன், இந்துக் கல்லூரி, மானிப்பாய். ஓரளவு சரியான விடை அனுப்பியவர்களின் பெயர்கள்: மல்லிகா இராசையா, காங்கேசன் துறை; இ. சசிகலா, நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன் துறை; சி. யோகேஸ்வரி, மகளிர் உயர்நிலைப் பாடசாலை, பண்டத்தரிப்பு; நா. லோகநாதன், கொட்டடி; வெ. செல்லத்துரை, நீர்வேலி; நா. சிவலிங்கம், கரவத்தனை; வயலற் யேசுதாஸன், யாழ்ப்பாணம்; தயாவதி நன்னித்தம்பி, கைதடி; அ. கனகசூரியர், ஊரெழு மேற்கு; மு. இராசகுலேந்திரன், சங்கானை.

**கேள்வி மண்டலம்**

சென்ற வாரம் அறிவித்ததற்கு எதிர்மாறாக இம்முறை காலஞ்சென்ற நேரு பற்றிய கேள்வியொன்று இடம்பெறுகின்றது. காலம் சென்ற இந்தியப் பிரதமர் நேருவை நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். இப்பொழுது வெளியாகும் தினசரிப் பத்திரிகைகளில் எல்லாம் நேரு பற்றிய செய்திகள் தான் முக்கிய இடம் பெறுகின்றன. என்ன அப்படித்தானே? நேருவைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த ஐந்து அல்லது ஆறு வார்த்தைகளைக் கொண்ட ஒரு வசனத்தை எனக்கு எழுதி அனுப்புங்கள். உதாரணமாக 'நேருஜி ஒரு உலகத் தலைவர்' என்று எழுதினால்

(5-ம் பக்கம் பார்க்க)

# கம்பராமாயண சித்திரப் போட்டி

## முடிவு திகதி 17-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

இலங்கைக் கம்பன் கழகம் யாழ்ப்பாணப் பாடசாலை மாணவ மாணவியரிடையே நடாத்தவிருக்கும் முதலாவது போட்டி இது. 'இதனை ஆதரித்துப் பயனடைதல் வேண்டும்' என்று ஆசிரியர்களையும், மாணவர்களையும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

**போட்டி விதிகள்**

1. கம்பராமாயணப் பாடல் வரிகளுள் ஒன்றைத் தெரிந்து அதன் பொருளுக்கேற்பச் சித்திரம் அமைக்கப்படல் வேண்டும்.

உதாரணமாக, 'அண்ணலும், நோக்கினன் அவளும் நோக்கினள்' என்ற வரி தெரியப்படுமானால், மிதிலை நிலாமுற்றமும் அங்குக் காதற்கனிவுடன் நிற்கும் ஜானகியும், வீதியில் வருகின்ற அழகனாகிய இராமனும் பாவங்கள், உணர்வுகள் நிறைந்தவகையிற் சித்திரிக்கப்படல் வேண்டும். இதுபோலவே பிறவும் எனக் கொள்க.

சித்திரங்களை எந்த வர்ணத்திலும் நீங்கள் வரைந்தனுப்பலாம். சாதாரண வரைதல் கொப்பித் தாளில் சித்திரத்தை வரைந்து அனுப்பினால் போதும்.

2. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவ மாணவியருட்பட வயது வரையறையின்றி எந்த மாணவரும் இப்போட்டியிற் பங்கு கொள்ளலாம்.

3. போட்டியிற்கலந்துகொள்வோர் கீழே தரப்படும் விண்ணப்பப்படிவத்தை நிரப்பி, அதனோடு தமது சித்திரத்தையும் சேர்த்துப் பதிவஞ்சலிற் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல்வேண்டும்.

போட்டி அமைப்பாளர்,
'கம்பராமாயணச் சித்திரப் போட்டி'
C/o 'ஈழநாடு' த. பெ. 49,
யாழ்ப்பாணம்.

4. சித்திரத்தின் கீழே தெரியப்பெற்ற பாடல்வரி பெரிய எழுத்துகளிலே அழகாகவும், தெளிவாகவும் எழுதப்படல் வேண்டும்.

5. போட்டியின் இறுதித் திகதி 17-6-64.

6. பரிசு அளிப்போர், பரிசின் பெறுமதி என்பன, பின்னர் அறிவிக்கப்படும்.

7. போட்டி அமைப்பாளரின் முடிவே இப்போட்டியில் இறுதி முடிவாகும்.

8. போட்டியோடு தொடர்புடைய தனிப்பட்ட கடிதத் தொடர்புகள் எவையும் போட்டியமைப்பாளரோடு வைத்தல் கூடாது. அவ்வாறு தொடர்பு வைப்போர் போட்டியினின்றும் நீக்கப்படுவர்.

9. பரிசுகள் ஜூன் 27-ம் திகதியன்று எமது கழகம் நடாத்தும் கம்பன் விழாவிற் கொடுக்கப்படும்.

## கம்பராமாயணச் சித்திரப் போட்டி

**விண்ணப்பப் படிவம்**

முழுப்பெயர் ........................................

முகவரி(பாடசாலை) ........................................

சித்திரத்திற்குத்தெரிந்த பாடல்வரி ........................................

மேற்படி போட்டியிலே கலந்து கொண்டுள்ள எனது கல்லூரி / பாடசாலை, மாணவன் / மாணவி தாமே இச்சித்திரத்தை வரைந்தார் என உறுதி செய்கிறேன்.

| ........................ | ........................ | ........................ |
|---|---|---|
| கல்லூரி | திகதி | அதிபர் |

# சிறுபான்மையினருக்கு உரிமை அளிக்காத ஜனநாயகமா?

## பிக்கு பேராசிரியர் கேள்வி

களனி, செவ்வாய்

"இந்த நாட்டில் ஜனநாயகம் நிலவவேண்டும் என்று ஆட்சி புரிவோர் விரும்பினால் சிறுபான்மையினருக்கு எந்த விதமான அநீதிகளும் இழைக்கப்படாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். சிறுபான்மையினரது உரிமைகள் ஒவ்வொன்றும் பாதுகாக்கப்படவேண்டும். இலங்கை வாழ் பெரும்பான்மைச் சமூகத்தினர் சிறுபான்மைச் சமூகத்தினரை அடக்கி ஒடுக்க முயல்கையில் ஜனநாயகத்தைப் பற்றி இங்கு பேசுவதே கேலிக்கிடமாகும்".

இவ்வாறு வித்தியாலங்காரப் பல்கலைக்கழக மாணவர் மன்றம் நடாத்திய 'நேரு நினைவு'க் கூட்டத்தில் உரையாற்றிய வித்தியாலங்காரப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் வண. கொட்டஹென பன்னகீர்த்தி தேரோ கூறினர். கூட்டத்துக்கு வண. பெலன்வில விமலரத்னதேரோ தலைமை தாங்கினர்.

வண. கொட்டஹென பன்னகீர்த்திதேரோ தொடர்ந்து பேசியதாவது:

சில அரசியல்வாதிகள் பௌத்தமதத்தை இந்த நாட்டின் தேசிய மதமாக்க வேண்டும் என்று பேசி வருகிறார்கள். அரசியலும் மதமும் ஒருபோதும் இணையவே முடியாது. பௌத்த மதத்தைத் தேசிய மதமாக்கவேண்டுமா என்பதைப் பௌத்த குருமாரின் தீர்மானத்துக்கு அரசியல்வாதிகள் விட்டுவிடவேண்டும். இதுவிஷயத்தில் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அரசியல்வாதிகளுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

என்னைப் பொறுத்தவரையில் பௌத்தத்தை இந்த நாட்டின் தேசிய மதமாக்குவதைப் பலமாக ஆட்சேபிக்கிறேன். பௌத்த மதத்தைப் பொறுத்தவரையில், 2500 வருடத்திய அதன் பழம் பெருமைக்கியைய, அதனைப் புதுக்கி அமைக்கவேண்டியதே, நமக்கு முன் இன்றுள்ள ஒரே ஒரு பணியாகும்.

வித்தியோதயப் பல்கலைக் கழகச் சரித்திரப் பேராசிரியர் டாக்டர் ஹேமச்சந்திரராய் பேசியதாவது:

"ஜனநாயக அமைப்பை இலங்கையில் இதுவரை மாற்றாததற்காக நாம் நமது அரசியல் வாதிகளுக்கு நன்றி செலுத்த வேண்டும். சர்வாதிகார ஆட்சியொன்றை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வதந்திகள் நிலவுகின்றபோதிலும் ஜனநாயக அரசியல் அமைப்புக்கு இந்த நாட்டில் ஆபத்தொன்றும் நேராதெனவே யான் நம்புகின்றேன்".

—

## மூளைக்கு வேலை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் நான்கு (4) வார்த்தைகள் உண்டு. இதைப் போல ஆறு வார்த்தைகளுக்கு அதிகரிக்காது ஒரு நல்ல வசனத்தை எழுதி அனுப்புங்கள். நல்ல வசனங்கள் அனுப்பியவர்களின் பெயர்கள் இப்பகுதியில் இடம்பெறும். அதிமுக்கியம் பெறும் வசனங்களும் இங்கு வெளியாகும். நேரு பற்றிய உங்கள் வசனங்களை எதிர்வரும் சனிக்கிழமைக்கு (6-6-64) முன்னதாக "மாணவர் மலர்", ஈழநாடு, த. பெ. 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

— சாந்தா

## "சங்கீதக் கச்சேரி செய்வது எளிதல்ல"

கொடிகாமம், திங்கள்

"மேடையில் சங்கீதக் கச்சேரி செய்வது என்பது ஓர் எளிதான காரியமன்று. கச்சேரி செய்யும் இடம் இந்தியாவில் தூக்குமேடைக்குச் சமமாகும். சாதாரண ஞானத்துடன் மேடையில் ஏறி இந்தியாவில் கச்சேரி செய்ய இயலாது. சிறு பிள்ளைகளே பாடகரை பல விளக்கங்களைக் கேட்பர். விஸ்தாரமாக இராகம் பாடுதல், கீர்த்தனங்களை மெருகுடன் பாடுதல், நிரவல் செய்தல், கற்பனஸ்வரம் பாடுதல் என்பனவற்றில்திறமைஅடைந்தால்தான் ஒரு பாடகர் ரஸிகர்களைத் திருப்தி செய்ய முடியும்" என்று மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் சந்நிதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற இசை விழாவிற்கு தலைமைவகித்த இசைப் புலவர் என். சண்முகரத்தினம் கூறினர்.

கடைசித் தினமான நேற்று சங்கீதகலாமணி திரு. சி. செல்லத்துரை, செல்வன் எஸ். சண்முகராகவன், செல்வி சரஸ்வதி வெங்கடாசலம் ஆகியோர் இசைவிருந்தளித்தனர்.

—

## யாழ். பெற்றோர் சங்கம் நேருஜிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

மறைந்த பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக யாழ்ப்பாணம் பெற்றோர் சங்கம் ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இவ் அனுதாபத் தீர்மானத்தில் "உலக சமாதானத் தலைவர் ஸ்ரீ நேருவின் மறைவிற்கு யாழ்ப்பாணப் பெற்றோரின் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்து மறைந்த பெரியாருக்கு அஞ்சலி செலுத்துவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதன் நகல் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும் திருமதி இந்திராகாந்திக்கும் அனுப்பப்பட்டது. இரு நிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

—

## சிரஞ்சீவி . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோஜா மலரொன்றைத் தனது சட்டையிலும் செருகியிருந்தார்.

காந்திஜியின் மரணத்தின் பின் நேருஜியைவிட வேறு எந்தத் தலைவருமே இத்தகைய மதிப்புப் பெறவில்லை. "மனிதருள் மாணிக்கம்" என்று காந்திஜியாலேயே வர்ணிக்கப்பட்டவர் நேரு. காந்திஜியே ஒருமுறை "எனது அடுத்த வாரிசு நேரு"தான் என்று கூறியிருக்கிறார். ஆனல் ஸ்ரீ நேருஜியோ, "தனது வாரிசு யார்" என்று கூருமலே மறைந்துவிட்டார்.

மறைந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடியே தனது பேச்சுக்களிடையே "சுதந்திர இந்தியாவை மேன்மைப் படுத்தும் மனிதர்"என்று ஸ்ரீ நேருஜியை குறிப்பிட்டுள்ளார். கென்னடியின் உயர்ந்த நண்பர்களில் ஸ்ரீ நேருஜியும் ஒருவராகவிளங்கினர். இத்தகைய ஸ்ரீ நேரு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நட்பைப் பலப்படுத்திய நேரு—கென்னடியின் பிறந்த தினத்திற்கு இரு நாட்கள் முன்னராகவே, பார் தவிக்க—பாரதம் தவிக்க விட்டு—மறைந்து விட்டார். கென்னடியின் பிறந்த தினம் 29-5-1917; ஸ்ரீ ஜவஹர்லால் நேரு இறந்ததினம் 27-5-1964.

எதிரியும் பாராட்டும்திறமை படைத்த நேருஜி மாண்ட செய்தி நம்மால் நம்பமுடியாது. அவர் மாளவில்லை. உலகமக்களின் உள்ளத்தில் கென்னடியைப் போல, ஆபிரகாம் லிங்கனைப் போல, காந்திஜியைப் போல இன்றும் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்! என்றும் வாழ்வார்! வாழட்டும் பாரதம் !

## மானிப்பாயில் 14 துண்டுக் காணிகள் ஏலவிற்பனை

ஆனைக்கோட்டையிலுள்ள ஆனைக்கோட்டை மடத்தின் தர்மகர்த்தாக்களின் உத்தரவுக்கிணங்கவும் இலக்கம் TR 43-ன் வழக்கின் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியின் பேரிலும் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி வெள்ளிக்கிழமையும் 13-ம் திகதி சனிக்கிழமையும் மானிப்பாயிலுள்ள முதலியார் கனகசபை வீதியில், மானிப்பாய் கிராமசபைஅளவைப்படி 3 பரப்பு முதல் 6 பரப்பு வரையிலான 14 துண்டுக் காணிகள் என்னல் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏலவிற்பனைகள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இது சம்பந்தமான மேல்விபரங்களை குறிப்பிட்ட ஏலவிற்பனை பற்றிய துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் அல்லது யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள 19, செட்டிவீதியிலுள்ள புரக்டர் திரு. சி. ரி. குமாரசுவாமி மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ரி. செல்லையா,
ஏலவிற்பனையாளர்,
37, கொழும்புத்துறை ரோட்,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்,
20 மே 1964. 383

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதி வருடம் வைகாசித் திங்கள் 22-ம் நாள் (4-6-64) வியாழக்கிழமை இரவு 12-58 மணி தொடக்கம் 1-20 மணி வரையுமுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் கைதடி திரு. சி. பொன்னையாவினதும்பாரியாரினதும் ஏகபுத்திரன் செல்வன் ஆறுமுகத்திற்கும் (பெரும்பாக பதிவு காரர் காரியாலயம் யாழ்ப்பாணம்), கைதடி வடக்கு சைவவித்தியாசாலை ஆசிரியர் திரு. சி. சரவணமுத்துவினதும் பாரியாரினதும் சிரேஷ்ட புத்திரி செல்வி புவனேஸ்வரிக்கும் திருமணஞ்செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றமித்திருடன் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

வரவேற்பு உபசரணை: 6-6-64 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும். 476

## ஊழல்களை ஒழிக்க சட்டம்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க இலாகாக்களில் கள்ளச்சந்தை, ஊழல்கள் இடம்பெற உடந்தையாயிருக்கும் ஊழியர்களுக்கு தண்டனை அளிக்கக் கூடியவகையான சட்டமொன்று இயற்றப்படவிருக்கிறது.

நிதிமந்திரியால் ஆரம்பிக்கப்பட்ட கண்காணிப்பு இயக்கத்தை ஸ்திரப்படுத்துவதற்கே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தீவு பூராவும் ஆரம்பிக்கப்படவிருக்கும் கண்காணிப்பு சங்கங்களின் அலுவல்களை சீர்ப்படுத்த நிரந்தர உத்தியோகஸ்தர்களைக் கொண்ட ஒரு தலைமைக்காரியாலயம் அமைக்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முத்துத்தீவு மோட்டார் விளையாட்டுக் கழகம்

(Pearl Isle Motor Sports Club)

இலங்கையில் பல பாகங்களிலும் மோட்டார் சைக்கிள், கார் பாய்ச்சல் இவைகளை இலங்கையின் சரித்திரத்திலேயே முதல்வராக நிலைநாட்டி வைத்ததின் காரணமாக ஒரு விளையாட்டுக் கழகத்தை ஸ்தாபிக்கவும் நமது இளைஞர்களை இவ்வித மோட்டார் கார் பாய்ச்சல், மோட்டார் சைக்கிள் பாய்ச்சல், கிணற்றுள் ஓடுதல், பூகோளத்துள் ஓடுதல், சாதாரண சைக்கிள் கிணற்றினுள் ஓடுதல், பந்தய ஓட்டங்கள் இன்னும் வெளிநாடுகளில் நடக்கும் விசேஷமான விளையாட்டுக்களைப் பழக்கும் நோக்கமாக இவ்விளையாட்டுக் கழகத்தை ஏற்படுத்தி நடாத்த முன்வந்திருக்கிறேன். முதன் முதலாக வடமாகாணத்தில் ஸ்தாபிக்கப்படும் இவ்விளையாட்டுக் கழகத்தில் மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், சைக்கிள் பாவிக்கும் இளைஞர்களும் இதில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் அங்கத்தவர்களாய்ச் சேர்ந்து ஒவ்வொருவரும் வெற்றி வீரர்களாக விளங்குவீர்களாக. சகல விபரங்களுக்கும் கீழ்க்காணும்விலாசத்துடன்தொடர்புகொள்ளுக.

சி. அரியரத்தினம்,
மோட்டார் கார்.
மோட்டார் சைக்கிள்
பாய்ச்சல் வீரன்.
384 மானிப்பாய்,

## வரி விளம்பரம்

### தேவை

சாப்பாடு, சிற்றுண்டிகள் தயாரிக்கக்கூடிய சுறுசுறுப்புள்ள சமையல்காரர் தேவை. சம்பளம் சாப்பாடு மற்றும் வசதிகளுடன் ரூ. 100/- தொடர்பு கொள்ளவும். எம். கே. நடராசா, புளியங்குளம். 478

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.
2. கபிரியேல் ஒயின்மென்ற
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.
3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளைவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:
GABRIELS,Chunnakam. 278

### தொய்வு, நீரிழிவு

அனுபவப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற நிபுணர்கள் அடங்கிய கற்றவர்களை இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 'ஈழநாடு' வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி

சுவையான செய்திகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தந்துவரும் 'ஈழநாடு' தனது பணியை மேலும் விரிவுபடுத்த முன்வருகிறது. கலை, பண்பாடு, இலக்கியம் முதலிய துறைகளுடன், பொருளாதாரம், கைத்தொழில், விஞ்ஞானம் ஆகிய துறைகளிலும் பயன் மிகுந்த தொண்டு புரிவது 'ஈழநாடு' பத்திரிகையின் இலட்சியமாகும். இந்த இலட்சியத்தை நிறைவேற்றி உருப்படியான சாதனைகள் சிலவற்றை நிலைநாட்டவேண்டும் என்ற நமது திட்டத்தின் முதலாவது படியாக 'ஈழநாடு' வாசகர்களுக்கு 'அறிவொளி' என்ற விஞ்ஞான சஞ்சிகையை அளிக்கிறோம்.

தமிழ்மொழியில் விஞ்ஞானக் கல்வி முன்னேறவும், மக்களிடையே விஞ்ஞான நோக்கு விருத்தியாகவும் வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட இளைஞர்கள் சிலரின் முயற்சியால் உதயமாகியுள்ளது தமிழில் விஞ்ஞானக் கல்வியை வளர்க்கும் நிறுவகம். இந்த நிறுவகத்தினர் பொறுப்பிலே தயாராகி, சிறந்த விஞ்ஞானக் கட்டுரைகளையும் விரும்பிப் படிக்கத் தூண்டும் விஞ்ஞானச் செய்திகளையும் தாங்கிவரும் மாதசஞ்சிகை 'அறிவொளி'.

7-6-64 தொடக்கம் ஒவ்வொரு மாதமும் முதலாவது ஞாயிற்றுக்கிழமை தோறும் 'ஈழநாடு' வெளியீட்டுடன் அனுபந்தமாக வாசகர்களுக்கு இச்சஞ்சிகை கிடைக்கும்.

காலகதியில் பொருளாதாரம், கைத்தொழில், கலை, இலக்கியம் முதலியவற்றிலே சிறப்பான ஈடுபாடுள்ளவர்களின் ஒத்துழைப்போடு, 'ஈழநாடு' வாரவெளியீடு ஒவ்வொன்றுடனும் ஒவ்வொரு சிறப்புச் சஞ்சிகையை அனுபந்தமாக அளிக்க எண்ணியுள்ளோம்.

7-6-64 'ஈழநாட்'டுடன் வரவிருக்கும் 'அறிவொளி'யின் முதலாம் இதழை வாசிக்கத் தவறாதீர்கள்

## நேருவின் அஸ்தியை களனியில் கரைப்பர்?

களனி, திங்கள்

களனிக் கிராமசபையின் அவசரக் கூட்டம் ஒன்றில் நேருவின் அஸ்தியை களனிகங்கையில்கரைப்பதற்காகப் பெற்றுத்தருமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# இரு தீவுகளை ஜப்பானுக்கு திருப்பிக்கொடுக்க ரஷ்யாவிருப்பம்

டோக்கியோ, ஜூன் 1

உலகப் போருக்கு முன் ஜப்பானுக்குச் சொந்தமாகவிருந்த நாடுகளை திருப்பித்தர ரஷ்யா ஒப்புக் கொண்டால் ரஷ்யாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள ஜப்பான் தயாராகவுள்ளதாக பிரதமர் இக்கேடா தெரிவித்துள்ளார். பிரதமர் இக்கேடா சோவியத் யூனியனுக்கு சென்று இது பற்றி பேச்சுவார்த்தை நடத்தவும் விருப்பம் தெரிவித்துள்ளார். எனினும் திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. இதற்கிடையில் இங்கு வந்து ஜப்பான் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய ரஷ்ய உதவிப் பிரதமர் ஜப்பானின் இரு தீவுகளை திருப்பிக் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

டோக்கியோவில் இருந்து ரஷ்யா திரும்பிய திரு. மிக்கோயன் தமது விஜயம் வெற்றியளித்துள்ளதாக குறிப்பிட்டதாக இன்னொரு செய்தி கூறுகிறது. இரண்டு தீவுகளை திருப்பிக் கொடுக்க தாம் ஒப்புக் கொண்டதாகவும் ஜப்பான் மேலும் இரண்டு தீவுகளை தரும்படி கேட்டதாகவும் அவர் தெரிவித்தாராம்.

## பூட்டானில் கள்ள வானொலிகள்!

புதுடில்லி, ஜூன் 1

பூட்டானில் உள்ள கள்ள வானொலிகளைக் கண்டுபிடிக்க உதவிசெய்ய இந்தியா தயாராகவுள்ளதாக இன்று லோகசபையில் திரு. லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்தார். பூட்டான் உதவி செய்யும்படி கேட்டால் இந்தியா பின்நிற்காதென்றும், சிலவேளைகளில் இந்தியா தானாகவே உதவிதர முன்வரலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். பூட்டானில் பல கள்ள வானொலிகள் இந்தியாவுக்கு எதிராக பிரசாரம் செய்வதால் இதுவிஷயத்தில் இந்தியா கவனம் செலுத்தவேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஒவ்வொரு வருடமும் அதிக நஷ்டம்

கொழும்பு, திங்கள்

சம்மாந்துறையிலுள்ள விவசாயநிலையத்தில் 60-ம், 61-ம் வருடத்தில் ரூபா 107,446 நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த வருடங்களில் ஏற்பட்ட நஷ்டம் இதற்கு முன்பான வருடத்திலும் பார்க்க ரூபா 20,000 அதிகமாகவுள்ளது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
M. G. M. Presents
The 4 Days of Naples
(Best war Film)

## மீண்டும் செயல்பட்டது

புங்குடுதீவு, திங்கள்

மூன்று வருட காலமாக இயங்காமலிருந்த இறுப்பிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டம் தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு. பற்றிக்கின் விசேஷ ஆணையின்கீழ் கூட்டப்பட்டது. காரசாரமான விவாதத்தின் பின் புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: நா. தம்பிப்பிள்ளை, உப தலைவர்: ஆ. பொன்னம்பலம், செயலாளர்: க. திருநாவுக்கரசு, உப செயலாளர்: நா. குணரத்தினம், தனாதிகாரி: அ. தியாகராசா.

## நேருஜியின் கடைசிச் செய்தி

புதுடில்லி, ஜூன் 1

நேருஜி இவ்வுலகிலிருந்து பிரிவதற்கு முன் வெளிநாட்டுத் தலைவர்களுக்குள் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி திரு நாசருக்கே இறுதியாக கடிதம் அனுப்பியிருந்தார். இக்கடிதத்தில் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு பற்றிக் குறிப்பிட்டிருந்தாரென்றும் இந்த மகாநாட்டில் தாம் கலந்து கொள்ள விருப்பது பற்றி தெரிவித்திருந்தாரென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீ நேரு அனுப்பிய இக் கடிதம் அவரின் மரணத்துக்குப் பின்னரே நாசருக்குக் கிடைத்தது. பாரதத் தொழிலாளர்களுக்கு அவர் இறுதியாகக் கூறியது "ஒவ்வொரு விஷயத்தையும் நாட்டின் பொது நன்மையைக் கருதியே செய்யவேண்டும்" என்பதே.

## சுகாதார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் மாற்றங்களில் தாமதம் ஏற்பட்டுள்ளது. உடன் மாற்றஞ்செய்யவேண்டும்.

4. நோயாளர் தொகை பெருகிகொண்டேபோக அதன் ரீதியில் தொழிலாளர் தொகையைக் கூட்டாது மாற்றஞ் செய்யப்பட்ட இளைப்பாறிய இடங்களை நிரப்பாததால்குறைந்துகொண்டுபோய்த் தொழிலாளருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இக் கஷ்டம் உடன் நிவர்த்திக்கப்படவேண்டும்.

5. பொதுச் சேவைச் சட்டம் 222 இன் படி தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் பிரச்சினைகளை ஒழுங்காக அராய அதிகாரிகள் உடன் ஒழுங்குகள் செய்யவேண்டும்

6. ஐந்து வருட தற்காலிக சேவையில் உள்ளவர்களை நிரந்தர சேவையில் அமர்த்தப் படவேண்டும்.

7. தற்போது பணியாளர் பொறுப்பில் உள்ள பொருட்களின் கணக்குப் பதிவு செய்யும் பொறுப்பை உடனடியாக தாதிகளுக்கு மாற்ற வேண்டும்.

# பர்மா இந்தியரை இந்தியா ஏற்கும்

புதுடில்லி, ஜூன் 1

**பர்மாவிலிருந்து இந்தியா வரவிரும்பும் இந்திய வம்சாவளியினரை ஏற்றுக்கொள்ள இந்தியஅரசாங்கம் தயாராயிருப்பதாக இன்று லோகசபையில் வெளிவிவகார உதவி மந்திரி திரு. தினேஷ்சிங் தெரிவித்தார்.**

இந்த வகையில் எத்தனை பேரை இந்தியா ஏற்றுக் கொள்ளுமெனக் கணக்கிட்டுக் கூறமுடியாதெனவும் அதிகமாக ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளுமெனவும் சில அங்கத்தவர்கள் தாக்கல்செய்திருந்த கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார். பர்மாவில் வர்த்தகம் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து 1000 பேர் இந்தியா வந்துவிட்டனரெனவும் அவர் தெரிவித்தார்.

பர்மாவில் உள்ள ஐந்தரை லட்சம் பேரில் ஒரு லட்சம் பேருக்கு இந்தியப்பிரஜா உரிமை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பர்மிய-இந்திய வெளிவிவகார அமைச்சுகளுக்கிடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் திரும்பிவரும் இந்தியர்களுக்கான பிரயாணவசதி, நஷ்டஈடு முதலியன முக்கிய அம்சங்களாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வட்டுக்கோட்டை கிராமசபை தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று முன்தினம் நடைபெற்ற வட்டுக்கோட்டை கிராமசபைத் தேர்தலில் 10-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட வி. அமிர்தலிங்கம் 212 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார். 17-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட கே. ஐயாலிங்கம் 326 வாக்குகள் பெற்றார். 14-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட என். கத்தையாவிற்கு ஒரே ஒரு வாக்கு மட்டும் கிடைத்தது.

20 வட்டாரங்களைக்கொண்ட வட்டுக்கோட்டை கிராமசபையில் ஏற்கனவே 14 பேர் போட்டியின்றி தெரிவுசெய்யப் பட்டுள்ளார்கள்.

| | |
|---|---|
| 10-ம் வட்டாரம் | |
| வி. அமிர்தலிங்கம் | 271 |
| வி. தம்பு | 59 |
| 12-ம் வட்டாரம் | |
| ஏ. விரகநாதன் | 218 |
| கே. துரைராசா | 174 |
| 14-ம் வட்டாரம் | |
| வீ. சின்னத்துரை | 8 |
| என். கந்தையா | 1 |
| 16-ம் வட்டாரம் | |
| கே. நடராசா | 220 |
| எஸ். செல்வநாயகம் | 215 |
| 17-ம் வட்டாரம் | |
| கே. ஐயாலிங்கம் | 326 |
| ஏ. வேலாயுதபிள்ளை | 261 |
| கே. முத்தையா | 17 |
| 20-ம் வட்டாரம் | |
| ஏ. நடராசா | 319 |
| எம். சின்னத்தம்பி | 155 |

## கருணாரத்னவுக்குக் கமிஷனின் கண்டனம்

கொழும்பு, திங்கள்

லிபிரியாவில் நடக்கும் உலக சுகாதாரவிழாவில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளச் சென்றிருக்கும் இலங்கையின் முன்னைநாள் சுகாதாரசேவைத் தலைவர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணாரத்னவின்மீது மூன்று சத்திர சிகிச்சை நிபுணர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்திய மூன்று நபர் கொண்ட பொது சேவைக் கமிஷன் பலத்த கண்டனங்களைத் தெரிவித்துள்ளது.

இந்தக் கமிஷனின் தலைவர் நீதிஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. டி. ஜே. ஆர். குணவர்த்தன, மந்திரிசபைக் காரியதரிசி திரு. டி. ஜி. ஜயரத்னவும் காணி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஸ்ரீகாந்தாவும் இந்தக் கமிஷனின் ஏனைய உறுப்பினராவர்.

பொது சேவைக் கமிஷனின் விசாரணை விபரங்களை லிபிரியாவில் உள்ள டாக்டர் கருணாரத்னவுக்கு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது எனத் தெரிய வருகிறது.

ஏப்ரல் 27-ந் திகதியிலிருந்து சுகாதார சேவைத்தலைவர் பதவியிலிருந்து டாக்டர் டபிள்யு. ஏ. கருணாரத்ன விலகிவிட்டார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# "ஐக்கிய இலங்கைக்கு நிச்சயம் இது நல்லதல்ல"

## கட்டாய ஓய்வுபற்றி திரு. ஜி. ஜி. அறிக்கை

கொழும்பு, திங்கள்

"சமீபத்தில் பல அரசாங்க தமிழ் ஊழியர்களுக்குக் கட்டாய ஓய்வு உத்தரவுகள் வழங்கப்பட்டிருப்பது எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. சிங்களத்தில் தேர்ச்சியடையாதவர்களைப் பிடிவாதமாக வேலைநீக்கஞ் செய்வதென்ற அரசாங்கத்தின் கொள்கை, மிகுந்த துயரை ஏற்படுத்துகின்றது. புதிதாக இயற்றிய பல சட்டங்களின் துணையோடு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகள் தேசியச் சிறுபான்மை இனத்தினருக்கெதிராக இழைக்கப்படும் மிருகத்தனமான அநீதி எனவே கருதுகிறேன்" என்று திரு. ஜி. ஜி பொன்னம்பலம் கியூ. ஸி. வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"சிங்களத்தில் தேர்ச்சி பெறாத ஊழியரை வேலைநீக்கம் செய்வதற்கு வாய்ப்பளிப்பது சிங்களம் மட்டும் சட்டம். இத்தருணத்தில் சட்டம் இயற்றப்பட்ட போது நிகழ்ந்தவைகளை நினைவூட்டலாமென்று கருதுகிறேன். 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந் தேதி சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்திற் காலஞ்சென்ற பிரதமர் கொண்டுவந்த போது அரசியல் சட்டத்தின் 29-வது ஷரத்துக்கு இச்சட்டம் முரணானது என யான் சுட்டிக்காட்டினேன்; சபைத் தலைவரை இது அரசியல் சட்டத்துக்கு முரணானது என்ற காரணத்துக்காக நிராகரிக்கும்படி வேண்டினேன்.

அந்தச் சமயத்தில் சபைத் தலைவர், இந்தச்சட்டம் செல்லுபடியாகுமா ஆகாதாவென்பதைத் தீர்மானிக்க வேண்டியவன் யானல்ல. நீதிஸ்தலமே அத்தகைய தீர்ப்பு எதையும் வழங்கலாம் எனக் கூறினர்.

எனது எதிர்ப்பு ஏற்றுக் கொள்ளப்படாத பின்பு இச் சட்டத்திற்குத் திருத்தப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தேன்.

எனது சமூகத்தின் மீதுள்ள ஆழ்ந்த அபிமானத்தின் பிரதிபலிப்பே யான் சமர்ப்பித்த திருத்தப் பிரேரணையாகும்.

சாதி, சமய, மொழி வேறுபாடுள்ள சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கும் வகையிலேயே 29-வது ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய ஒற்றுமையைக் குலைக்கும்வகையில் இந்த அரசாங்கமோ அல்லது வேறெந்த அரசாங்கமோ நடவடிக்கைஎடுக்கும் வரையும் 29-வது ஷரத்தினை ஏற்படுத்திய நோக்கம் நிறைவேறப் போவதில்லை.

எனக்குத் தெரிந்தவரையில் வேறெந்த நாடும் உத்தியோக மொழியொன்றைப் புகுத்துவதற்காக அரசாங்க ஊழியர்களைக் கட்டாய ஓய்வு பெறும்படி வற்புறுத்தியதில்லை. இந்தியாவின் காலஞ்சென்ற பிரதமர் நேரு ஹிந்தி உத்தியோக மொழியாவதால் அரசாங்க உத்தியோகத்தர்களது உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு போன்றவை பாதிக்கப்பட மாட்டாது என உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்று.

நேருவினது வழியைப் பின்பற்றி சிறுபான்மையினரின் மொழி சமய, உரிமைகளை வழங்குவதே நேருவின் நினைவுக்கு யாம் செய்யும் ஒப்பற்ற அஞ்சலியாகும்.

## நேருவின் மறைவுக்கு 'அரசியல் கழகம்' அனுதாபம்

யாழ்ப்பாணம், திங்கள்

பாரதப் பிரதமர் ஸ்ரீ நேருவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அரசியல் கழகத்தினர் சென்ற வெள்ளிக்கிழமை அனுதாபக் கூட்டமொன்றை நடத்தினர். ஸ்ரீ நேருவின் உயரிய பண்புகள் குறித்து பலர் உரை நிகழ்த்தினர்.

இப்பொழுது திரையிடப்படுகிறது !

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி | பிளாஸா | நவா |
| (கொழும்பு) | (வெள்ளவத்தை) | (கொம்பனித்தெரு) |
| ராஜ் | வெலிங்டன் | விஜயா |
| (நீர்கொழும்பு) | (யாழ்ப்பாணம்) | (மட்டக்களப்பு) |

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

| | | |
|---|---|---|
| ஸ்ரீகிருஷ்ணா | ஜுப்பிட்டர் | தாஜ்மஹால் |
| (திருமலை) | (குருணாகலை) | (கல்முனை) |

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்
இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.